**கவனிக்க.-** 2010.05.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி I : தொகுதி (III) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1654 - 2010 මැයි මස 14 වැනි සිකුරාදා - 2010.05.14

1654 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 632 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 632 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 636 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 638 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மே மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

குறிப்பு இல. எஸ்ஆர்எஸ்/எப்6799

**இலங்கை புகையிரத திணைக்களம்**

தெமட்டகொடை பாலம் சார்ந்த முற்றவெளிக்கு 3 வெல்டிங் ஜெனரேட்டர்களை வழங்குவதற்கான கேள்வி

3 வெல்டிங் ஜெனரேட்டர்களை வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை "இலங்கை புகையிரம், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை, புகையிரத திணைக்கள கொள்வனவுக் கமிட்டி (பாரிய) தலைவர்" அவர்களால் கோரப்படுகின்றன.

2. ரூபா 2,000 ஓர் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2010.05.24 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை கொழும்பு 10, புகையிரத களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. புகையிரத தலைமையக அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இல் 2010.05.26 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4. பொறியிடப்பட்ட கேள்விகளை கீழுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம் :-

தலைவர்,
திணைக்கள கொள்வனவுக் கமிட்டி (பாரிய),
இலங்கை புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

5. கேள்வி ஆவணங்களை "புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" இல் இலவசமாகப் பரிசீலிக்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்கு "புகையிரத களஞ்சிய திணைக்களம், புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" இல் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள். தொலைபேசி இலக்கங்கள் : 2432044 அல்லது 2436818.

தலைவர்,
திணைக்கள கொள்வனவுக் கமிட்டி (பாரிய),
இலங்கை புகையிரத சேவைகள்.

5-319

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

**கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2010/2011**

(2010 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)

2010 ஆம் வருடம் ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2011 ஆம் வருடம் ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய உரிமைப் படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச் சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:-
"....................................... ஆம் இலக்க .................................. கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"
எனக்குறிப்பிடப்பட வேண்டும். 2010.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கல்பிட்டி பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற் குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இடுதல் வேண்டும்.

5. 2010.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் இச்செயலகத்திற்குச் சமுகமளித்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2010.06.02 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

எம். எச். எம். நியால்தீன்
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2010.04.26.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2010.05.18, மு.ப. 10.00 மணி | ரூபா 1,000 |
| 02 | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2010.05.18, மு.ப. 10.00 மணி | ரூபா 1,000 |

5-301

---

## புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகையும் - 2010/2011

(2010.07.01 - 2011.06.30 ஆந் திகதி வரை)

2010, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2011, யூன் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணை தொடர்பாக குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கமைய, தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்கள் தொடர்பிலான பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத்தொகைப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் பின்வருமாறு:-

"............... இலக்கமுள்ள .................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

என குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2010.05.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2010.05.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. சி. எம். நபீல்,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2010.04.23.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக்குடியிருப்பு | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>இரவு 8.00 | 2010.05.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 1,000.00 |

5-241

---

## வென்னப்புவை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2010/2011

2010 ஆம் வருடம் யூலை மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2011 ஆம் வருடம் யூலை மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தயார் செய்யப்படல் வேண்டும்.

2. விண்ணப்பப்பத்திரங்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் தயார் செய்யப்படல் வேண்டியதோடு, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வைப்புக் கொள்கைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், விண்ணப்பிக்கும் தொகையின் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்பட்டும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''.................................. இலக்கமுடைய ...................................................... கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்'' என கீழ் குறிப்பிட்ட உப அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தவறணைக்கான இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு 2010, யூன் மாதம் 7 ஆந் திகதி தொடக்கம் 14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் வென்னப்புவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 207, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இடுதல் வேண்டும்.

5. 2010.06.14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததுடன் விண்ணப்பப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் விண்ணப்பக்காரர்கள் அனைவரும் வென்னப்புவை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் திரும்ப விற்பனை 2010.06.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும் அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானப்பத்திரத்தின்படி அமைதல் வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் வென்னப்புவை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். டி. நாமரத்ன,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவை.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01. | வென்னப்புவை பி. செ. பிரிவு | தம்பராவில் | 2010.06.14 மு. ப. 10.00 | 500.00 |
| 02. | வென்னப்புவை பி. செ. பிரிவு | நங்சுண்டான்கரை | 2010.06.14 மு. ப. 10.00 | 250.00 |
| 03. | வென்னப்புவை பி. செ. பிரிவு | வைக்கால் | 2010.06.14 மு. ப. 10.00 | 1,000.00 |
| 04. | வென்னப்புவை பி. செ. பிரிவு | பொரலஸ்ஸ | 2010.06.14 மு. ப. 10.00 | 500.00 |
| 05. | வென்னப்புவை பி. செ. பிரிவு | தும்மளதெனிய | 2010.06.14 மு. ப. 10.00 | 1,000.00 |
| 06. | வென்னப்புவை பி. செ. பிரிவு | லுனுவில | 2010.06.14 மு. ப. 10.00 | 500.00 |
| 07. | வென்னப்புவை பி. செ. பிரிவு | வென்னப்புவ | 2010.06.14 மு. ப. 10.00 | 2,000.00 |
| 08. | வென்னப்புவை பி. செ. பிரிவு | உள்ஹிட்டியாவ | 2010.06.14 மு. ப. 10.00 | 500.00 |
| 09. | வென்னப்புவை பி. செ. பிரிவு | நயினாமடம் | 2010.06.14 மு. ப. 10.00 | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு. ப. 11.00 | பி. ப. 02.00 |
| பி. ப. 05.00 | இரவு 08.00 |

5-291

---

**சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2010/2011**

2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு யுன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைந்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு:

"......................................... இலக்கமுள்ள ......................................... கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2010.05.19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும்.

5. 2010.05.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2010.06.03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2010, ஏப்பிறல் 23.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட் இலக்கம் 2 | இச்சம்பிடிய | 2010.05.19 மு.ப. 10.00 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட் இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப்பட்டுள்ளது | 2010.05.19 மு.ப. 10.00 | 1,000 |
| 3. | பிடிகல கோரல | ஒலிதலுவ | 2010.05.19 மு.ப. 10.00 | 250 |

5-200

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனி உருவாக்கம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

இலங்கை கம்பனிகள் சட்டம் 2007 உறுப்புரை 9(1) இன்படி கீழ்வரும் கம்பனியின் உருவாக்கம் பற்றி இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது :-

*பெயர்* : ஏ. ரி. எம். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 70946
*உருவாக்கப்பட்ட திகதி* : 2010, பெப்புருவரி 9
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 110, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04

5-272

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டியைச் சேர்ந்த ஸ்ரீமத் குடாரவத்த மாவத்தை, இல. 229/ஜே என்ற விலாசத்தில் வசிக்கும் அன்டன் ஜோர்ஜ் சுரேஸ் குமார் மாரியம்பிள்ளை ஆகிய என்னால் கண்டி, ஸ்ரீமத் குடாரத்வத்தை மாவத்தை, இல. 229/ஜே என்ற விலாசத்தில் வசிக்கும் நில்மினி தீரசேகர என்பவருக்கு கண்டி பிரசித்த நொத்தாரிசு என். ஜி. அபேரத்ன பண்டார அவர்களால் இல. 14144, 2007.05.07 ஆந் திகதியிடப்பட்டதும் எழுதி உறுதிப்படுத்தப்பட்டதுமான மற்றும் கண்டி பதிவாளர் அலுவலகத்தில் அற்றோணி தத்துவ ஆவணத்தின் 26 ஆவது பிரிவின் 55 ஆவது பந்தியில் 2007.06.11 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட விசேடமான அற்றோணி தத்துவத்தை அதிகாரமற்றதாக்கி இரத்துச் செய்வதாக பிரகடனப்படுத்துவதோடு, இதன் பிறகு அவரால் செய்யப்படும் எந்தச் செயற்பாடுகளுக்கும் அதிகாரங்களுக்கும் உறுதி எழுப்பும் விடயங்களுக்கும் அவருக்காக நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என பிரகடனப்படுத்துகிறேன்.

அன்டன் ஜோர்ஜ் சுரேஸ் குமார் மாரியம்பிள்ளை.

5-248/1

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டியைச் சேர்ந்த ஸ்ரீமத் குடாரத்வத்த மாவத்தை, இல. 229/5 என்ற விலாசத்தில் வசிக்கும் அன்டன் ஜோர்ஜ் சுரேஸ் குமார் மாரியம்பிள்ளை ஆகிய என்னால் கண்டி, ஸ்ரீமத் குடாரவத்தை மாவத்தை, இல. 229/5 என்ற விலாசத்தில் வசிக்கும் நில்மினி தீரசேகர என்பவருக்கு கண்டி பிரசித்த நொத்தாரிசு ஜே. சி. விஜயதுங்க அவர்களால் இல. 1442, 2006.03.31 ஆந் திகதியிடப்பட்டதும் எழுதி உறுதிப்படுத்தப்பட்டதுமான மற்றும் கண்டி பதிவாளர் அலுவலகத்தில் அற்றோணி தத்துவ ஆவணத்தின் 20 ஆவது பிரிவின் 49 ஆவது பந்தியில் 2006.04.05 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட விசேடமான அற்றோணி தத்துவத்தை அதிகாரமற்றதாக்கி இரத்துச் செய்வதாக பிரகடனப்படுத்துவதோடு, இதன் பிறகு அவரால் செய்யப்படும் எந்தச் செயற்பாடுகளுக்கும் அதிகாரங்களுக்கும் உறுதி எழுப்பும் விடயங்களுக்கும் அவருக்காக நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என பிரகடனப்படுத்துகிறேன்.

அன்டன் ஜோர்ஜ் சுரேஸ் குமார் மாரியம்பிள்ளை.

5-248/2

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலரும் அறியத்தருவது யாதெனில், கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எம். ஜிப்ரி அவர்களால் எழுதி உறுதிப்படுத்திய இல. 3736 மற்றும் 2005.09.15 ஆந் திகதியின்படி மாத்தளை, தாரலந்த வீதி, இல. 44 இல் வசிக்கும் அப்துல் சதார் மொகமட் அஸ்வார்ட் இற்கு தரப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தை (2010.03.20) இல்லாதொழிக்கிறேன் என்றும், இன்று முதல் இது சம்பந்தமாக எவ்வித அதிகாரமும் இல்லை என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன். மேற்சொல்லப்பட்ட அற்றோணி

தத்துவப் பத்திரம் கண்டி பதிவாளர் ஆணையாளர் அலுவலகத்தில் இல. 18/152 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அப்துல் சதார் மொகமட் அன்சார்.

2010.03.20.

5-299

---

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கணேமுல்ல, கலஹிடியாவ 236 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஜயவீர ஆராச்சிகே ரூபா நிஹால் ரணசிங்க ஆகிய என்னால் 2006, ஒற்றோபர் 23 ஆந் திகதி பகிரங்க நொத்தாரிசு லால்விமலசிறி முனசிங்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 893 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவம் மூலம் கணேமுல்ல கலஹிடியாவ 258 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஜோசப் பொனிபஸ் சார்ள்ஸ் டீ ரோஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கிறேன்.

ஜயவீர ஆராச்சிகே ரூபா நிஹால் ரணசிங்க.

5-194

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : இன்டியூட் குளோபல் (பிறைவேட் லிமிட்டெட்)
*கம்பனி இலக்கம்* : பீவீ 70354
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 161, பத்தகம வடக்கு, ஜா-எல
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, திசெம்பர் 15

சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலுஸன்ஸ் அன்ட் செக்கிரடரிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

5-209

---

### கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : லுமென் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு முகவரி* : 3 ஆம் மாடி, இல. 2/5, ஸ்டேஷன் றோட், கொழும்பு 3
*பதிவு இலக்கம்* : பீவீ 71499

எச்டிபி பிஸ்னஸ் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

இல. 2/5, ஸ்டேஷன் றோட்,
கொழும்பு 3.

5-208

---

### நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு முன் செய்யப்படும் அறிவித்தல்

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, கல்லூரி வீதி, இல. 1/1 இல் வசிக்கும் குருசாமி பொன்னுசாமி ஆகிய நான், கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மொழியில் செயலாற்றும் பகிரங்க நொத்தாரிசாக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் (107 ஆவது அத்தியாயம்) 7 ஆவது பிரிவிற்கேற்ப இன்றிலிருந்து ஒரு மாத காலம் முடிவடைந்ததன் பின் பதிவாளர் நாயகத்திடம் விண்ணப்பம் செய்துகொள்வதாக இதன் மூலம் சகலருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருசாமி பொன்னுசாமி.

இல. 1/1, கல்லூரி வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு 13.
2010.04.27.

5-240

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 9(1) இன் விதிகளின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றது :-

*கம்பனியின் பெயர்* : கஸ்டன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : லொட் ஏ0, சீதாவக இன்டஸ்டிரியல் பார்க், அவிசாவளை
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 71921
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, ஏப்பிறல் 19

புரொபெசனல் எஸ்ஸைன்மென்ட் அன்ட் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட், செயலாளர்கள்.

2010, ஏப்பிறல் 23.

5-242

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – கொக்கல கிளை

ஆதனம் ஏல விற்பனை

**தென் மாகாணம், காலி மாவட்டம், வலாவிட்டி கோரலயில் பெந்தொட்ட பலந்தாகொட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் டி. எம். சிரிபாலவின் 2003.06.22 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2275 இல் காண்பிக்கப்பட்ட கபலியாகொடவத்த லொட் 3 என்ற காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 44 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து**

**(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 39பே.)**

*(கடன் எடுத்த கொஸ்கலண்ண துரகே நிசாந்த ஜெயராஜ் சேனாதீர மற்றும் நிசந்த சமந்தி மல்லவராச்சி என்பவர்கள் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியு 116) இனால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேலே விபரிக்கப்பட்ட காணிகளை 2010, யூன் மாதம் 09 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** *- 2009.12.18 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2009.12.26 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 2010.05.14 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2010.05.14 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***காணிக்குச் செல்லும் விதம்.*** *- இக்காணி எல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளது. எல்பிட்டியவில் இருந்து பிட்டவெல றோட் ஊடாகச் சென்று பஸ் டிப்போவைத் தாண்டி 200 மீட்டர் தூரம் சென்று இடதுபக்கம் உள்ள சமகி மாவத்தையில் ஒரு 250 மீற்றர் சென்ற பிறகு மேல் பகுதியில் காணி அமைந்துள்ளது.*

**கொடுப்பனவு செலுத்தும் முறை.** - உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5%;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அல்லது கொக்கல கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- "முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, ஏற்றுமதி பாகம், காலி றோட், கொக்கல. தொலைபேசி இல. : 091-2282339, 091-2283388. ; பெக்ஸ் இல. : 091-2282444.

எல். பி. சேனநாயக்க (சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற மூத்த ஏலதாரர், விலைமதிப்பிடுபவர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி : 011-3144520.
தொலை./பெக்ஸ் : 011-2445393.

5-295

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – அம்பலாங்கொடை கிளை

ஆதனம் ஏல விற்பனை

**தென் மாகாணம், காலி மாவட்டம், வெலபொட பத்துவ உணகஸ்வல கரந்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள காலி மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் 31316 இல் இணைக்கப்பட்டுள்ள நிலஅளவையாளர் ஏ. எப். பிண்துஹேவாவின் 1934.01.13 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 935ஏ இல் காண்பிக்கப்பட்ட ஒன்றாக்கப்பட்ட காணித்துண்டுகளான லொட் ஜே மற்றும் கே என்ற பணபிட்டியவத்த அல்லது பணபிட்டியகல்கந்த காணியின் நிலஅளவையாளர் எம். தேஜசிரியின் 1998.09.18 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 700 இல் காண்பிக்கப்பட்ட லொட் 7 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து. மற்றும் லொட் 6 (பாதைக்கு என்று ஒதுக்கப்பட்டது) காணியைப் பாவிக்கும் உரிமையுடன்**

**(விஸ்தீரணம் : 2ஏ. 2றூ. 24பே.)**

*(காணியை கடன் எடுத்த/ஈடுவைத்த பீல்லகொட ஏவாகே அஜித் நிலங்க குணசிரி மற்றும் இலந்தாரி தேவ சரோஜினி ஜயசிங்க என்பவர்கள் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேலே விபரிக்கப்பட்ட காணியை 2010, யூன் மாதம் 09 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** *- 2009.10.23 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "த ஐலண்ட்", "லக்பிம" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், 2010.05.14 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2010.05.18 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**காணிக்குச் செல்லும் விதம்.-** அம்பலங்கொடையில் இருந்து எல்பிட்டிய றோட் ஊடாகச் சென்று கெரவ சந்தியில் இருந்து இடதுபக்கம் உள்ள உண்கஸ்வெல றோட்டில் ஊடாக உண்கஸ்வெல செல்லவும் சந்தியில் இருந்து இடதுபக்கம் உள்ள முஸ்லிம் கொலனி றோட்டில் சென்று ஒரு 500 மீட்டர் தூரம் வரை சென்று இலங்கை மின்சார சபை பகுதி கிளை தாண்டமுன்பு இடதுபக்கம் உள்ள றோட்டில் 200 மீட்டர் தூரம் சென்ற பிறகு வலதுபக்கம் (2 மாடி வீடு) தாண்டிய பிறகு இக்காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 01%;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5%;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அல்லது அம்பலாங் கொடை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- "முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, காலி றோட், அம்பலாங்கொடை. தொலைபேசி இல. : 091-2256956, 091-5456767-9 ; பெக்ஸ் இல. : 091-5456770.

எல். பி. சேனநாயக்க (சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற மூத்த ஏலதாரர், விலைமதிப்பிடுபவர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலை./பெக்ஸ் : 011-2445393.

5-296

---

**டீஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

*23384 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்*

***மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்து, உடகம்பஹா கோரளே, விலான கிராமத்தில் அமைந்துள்ள விலான எஸ்ட்டேட் மற்றும் வோல்செண்ட் எஸ்ட்டேட் என அழைக்கப்படும் தோட்டங்கள் அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவையாளர் சுசிரி ஏக்கநாயக்க அவர்களால் வரையப்பட்ட 2004 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முதல் நவெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட 2887 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 01, 03, 05, 06, 07, 08, 10, 11 மற்றும் 12 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணியும் கட்டிடமும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், தோட்டங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக***

***(காணியின் விஸ்தீரணம் :***
***துண்டு 1 : 62ஏ. 3றூ. 37பே. அல்லது 25.4683 ஹெக்டெயர் ;***
***துண்டு 3 : 16ஏ. 1றூ. 22பே. அல்லது 6.6331 ஹெக்டெயர் ;***
***துண்டு 5 : 12ஏ. 0றூ. 1பே. அல்லது 4.8731 ஹெக்டெயர் ;***
***துண்டு 6 : 0ஏ. 3றூ. 20பே. அல்லது 0.3546 ஹெக்டெயர் ;***
***துண்டு 7 : 0ஏ. 0றூ. 34பே. அல்லது 0.0864 ஹெக்டெயர் ;***
***துண்டு 8 : 34ஏ. 3றூ. 8பே. அல்லது 14.0828 ஹெக்டெயர் ;***
***துண்டு 10 : 1ஏ. 2றூ. 16பே. அல்லது 0.6485 ஹெக்டெயர் ;***
***துண்டு 11 : 3ஏ. 2றூ. 31பே. அல்லது 1.4944 ஹெக்டெயர் ;***
***துண்டு 12 : 1ஏ. 0றூ. 21பே. அல்லது 0.4588 ஹெக்டெயர்.)***

*(கண்டி பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. யூ. கெப்பட்டிபொல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 3 ஆந் திகதியிடப்பட்ட 23384 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கண்டியைச் சேர்ந்த ஹேரத் முதியான்சேலாகே வெலகெதர உபதிஸ்ஸ வெலகெதர, ஹேமசிங்க நவரத்ன சித்துபண்டாரகே சந்திரா குமாரி வெலகெதர, ஹேரத் முதியான்சேலாகே வெலகெதர யுகேஸ்வர வெலகெதர, ஹேரத் முதியான்சேலாகே வெலகெதர ரசிக சுனெத் வெலகெதர, ஹேரத் முதியான்சேலாகே வெலகெதர மஹாநாக வெலகெதர மற்றும் ஹேரத் முதியான்சேலாகே வெலகெதர காமினி வெலகெதர ஆகியோரால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) ஏலதாரர் தரகு விற்பனை விலையின் 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 35,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட நூற்றாண்டுக்கும் மேல்
மக்கள் நன்மதிப்புப்பெற்ற இலங்கையின்
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொறிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

5-268

---

## டீஎப்சீசீ வர்தன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

*378 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை-தொட்ட முனை, பாணந்துறை-தல்பிட்டி தெவட்ட, மாலமுல்லையில் அமைந்துள்ள புவக்கஹவத்த எனவும் அட்டம்பகஹவத்த எனவும் அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவையாளர் வை. கே. கொஸ்தா அவர்களால் வரையப்பட்ட 1999 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதியிடப்பட்ட 2562 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 3ஏ, 3பி, 3சீ, 3டீ, 3ஈ, 3எப், 3ஜீ, 3எச் மற்றும் 3ஜே எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணி அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3றூ. 34.54பே.)**

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஐ. கருணாநந்த அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 378 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் பாணந்துறையில் 'லக்டிம்ப் எக்ஸ்போட்டர்ஸ்' எனும் பெயரில் பங்குடைமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்திவரும், பாணந்துறையைச் சேர்ந்த தொன் அத்துல அத்தபத்து மற்றும் உமயங்கனி மஹேஷா ரத்னவீர ஆகியோரால் டீஎப்சீசீ வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) ஏலதாரர் தரகு விற்பனை விலையின் 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 33,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட நூற்றாண்டுக்கும் மேல்
மக்கள் நன்மதிப்புப்பெற்ற இலங்கையின்
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொறிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

5-269

**செலான் வங்கி பீஎல்சீ - கொட்டாவை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளை மெதபற்று ஹோமாகம பிரதேச சபைக்குட்பட்டதும், பனலுவையில் அமைந்துள்ளதுமான ஹிக்கஹவத்த அத்துடன் கட்டிடங்கள் அனைத்துமுடைய மேற்படி காணித்துண்டு 1 என வரைபட இலக்கம் 873, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். பி. எல்விடிகல என்பவரால் 1996, பெப்புருவரி 4 ஆந் திகதி அளக்கப்பட்டவாறு இக்காணியின் பரப்பளவு பதினான்கு தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14.60பே.) மேற்படி காணி அவிசாவளை காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவாக்கல் இல. என் 165/176.**

**அத்துடன் வழிகளுக்கான உரித்துக்கள் கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது :**

